வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—வான்மதி

தேதி 04.05.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மோடி விமானபடை தளபதிசந்திப்பு (7)

கடந்த 22 ஆம் தேதி பஹல்காமில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்நிலையில், விமானப்படை தளபதி ஏர் சீப் மர்ஷல் அமர் ப்ரீத் சிங் இன்று புதுடெல்லியில் பிரதமர் திரு நரேந்திர மோடியை அவரது இல்லத்தில் சந்தித்துள்ளார். ஜம்மு காஷ்மீரில் உள்ள கட்டுப்பாட்டு கோட்டு பகுதிகளில் துப்பாக்கி சூடு நடைபெற்று வரும் நிலையில், விமானப்படை தலைமை தளபதியின் இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

ஆர்க்டிக் (12)

ஆர்க்டிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுடனான நட்புறவில் முன்னேற்றம் குறித்து இந்தியா ஆர்வம் காட்டி வருவதாக மத்திய

வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், இந்தியா ஆர்க்டிக் பிராந்தியத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிப்பதாகவும், சில ஆண்டுகளுக்கு முன்பு இதற்கான ஆர்க்டிக் கொள்கையை மத்திய அரசு கொண்டு வந்ததாகவும் தெரிவித்தார். அந்நாடுகளுடன் இணைந்து செயல்பட இந்தியா தயாராக இருப்பதாகவும் அமைச்சர் கூறினார். இந்தியா சில ஆண்டுகளுக்கு முன்பு ஆர்க்டிக் கொள்கையை வகுத்ததாக கூறிய திரு ஜெய்சங்கர், நார்வே-யில் செயற்கை கோள் நிலையத்துடன் இந்தியா மேற்கொண்ட ஒப்பந்தம் நம் நாட்டின் விண்வெளி துறைக்கு பயனளிக்க கூடியது என்றும் தெரிவித்தார்.

வேவ்ஸ் (4)

கடந்த 1 ஆம் தேதி தொடங்கி இன்று இறுதி நாளை எட்டியுள்ள உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு உச்சி மாநாடான, வேவ்ஸ் உச்சி மாநாட்டில், இன்று திரைப்பட தயாரிப்பு மற்றும் கலாச்சாரம் குறித்த சிறப்பு நிகழ்வுகள் இடம் பெற்றன. இது குறித்த கூடுதல் தகவல்கள்....

(வாய்ஸ் )

வேவ்ஸ் வாய்ஸ் (19)

15 ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு நிதி திரட்ட இம்மாநாடு வகை செய்ததாகவும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் இம்மாநாட்டில் விண்ணப்பங்களை சமர்பித்து உள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. கடந்த வியாழக்கிழமை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடங்கி வைத்த இம்மாநாட்டில் திரைப்படம், இசை, அனிமேஷன் துறைகளில் 800 கோடி ரூபாய்க்கும் மேல் வணிக பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. வளர்ந்து வரும் படைப்பாளர்களுக்கு அவர்களின் படைப்புகளை காட்சிப்படுத்துவதற்கு வேவ்ஸ் உச்சி மாநாடு வகை செய்தது குறிப்பிடத் தக்கது. இம்மாநாட்டில் 90 நாடுகளை சேர்ந்த 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள், ஆயிரக்கணக்கான கலை மற்றும் ஊடகத் துறையினர் மேலும் 65 நிறுவனங்களும் பங்கேற்றன. இம்மாநாட்டில் 42 முழுமையான அமர்வுகள் இடம் பெற்றன. 77 நாடுகளின் பங்கேற்புடன் நடைபெற்ற உலக ஊடகத் துறை பேச்சுவார்த்தைகளின் போது, ஊடக மற்றும் கேளிக்கை துறை தொடர்பான வேவ்ஸ் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. வின்ஸ் ஜெரார்டிஸ், ரிச்சி மேத்தா மற்றும் பல துறைகளில் சிறந்த வல்லுநர்கள் இன்றைய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர். இறுதி போட்டியாளர்கள் பங்கேற்கும் கலை நிகழ்ச்சிகளும், பேண்ட் மற்றும் சிம்பொனி நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன.

Hawk eye (12)

இந்தியாவின் கண்காணிப்பு திறன்களை மேம்படுத்தும் வகையில் Hawk eye-360 தொழில்நுட்பத்தினை இந்தியாவிற்கு விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் தெரிவித்துள்ளது. இந்திய பசிபிக் பிராந்தியத்தில், இந்தியாவின் கடல் சார் திறன்களை மேம்படுத்த இத்தொழில்நுட்பம் பயனுள்ளதாக அமையும் என்றும், பூமியை ஒட்டியுள்ள கீழ்மட்ட பாதையில் செயல்படும் செயற்கை கோள்களை பயன்படுத்தி எல்லை ஊடுருவல், கடத்தல் உள்ளிட்ட சட்ட விரோத செயல்பாடுகளை தடுக்க உதவும் என்றும்  அமெரிக்க பாதுகாப்பு ஒத்துழைப்பு முகமை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும், இத்தொழில்நுட்பம் தொடர்பான மென் பொருள் பயிற்சி மற்றும் ஆதரவை இந்தியாவிற்கு அமெரிக்கா வழங்கும் என்றும்  அதில் குறிப்பிடப் பட்டுள்ளது. தற்போதுள்ள சூழ்நிலையில் இந்தியாவின் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் இத் தொழில்நுட்பம் உதவும்.

*சுவாமி சிவானந்தபாபா* (6)

பத்மஶ்ரீ விருது பெற்ற யோகா பயிற்சியாளர் சிவானந்த பாபா, வாரணாசியில் நேற்று காலமானார். அவரது மறைவுக்கு  பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். தனது வாழ்க்கையை யோகா மற்றும் ஆன்மீக செயல்பாடுகளுக்காக அர்ப்பணித்தவர் அவர்

என்றும், அவரது வாழ்வு அனைத்து தலைமுறையினருக்கும் ஊக்கம் அளிப்பதாக அமையும் என்றும் பிரதமர் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

நீட் (9)

தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் எம்பிபிஎஸ், பிடிஎஸ் உள்ளிட்ட இளநிலை மருத்துவ பட்ட படிப்புகளுக்கான நீட் தேர்வு புதுச்சேரியில் 12, தமிழ்நாட்டில் 31 மையங்கள் உட்பட நாடு முழுவதும் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மையங்களிலும், வெளிநாடுகளில் 13 நகரங்களிலும் இன்று நடைபெற்றது. இத்தேர்வினை சுமார் 23 லட்சம் மாணவ- மாணவியர் எழுதியுள்ளனர். புதுச்சேரியில் மட்டும் சுமார் 5 ஆயிரத்து 230 மாணவர்கள் இத்தேர்வினை எழுதியுள்ளனர். தேர்வு அனுமதி சீட்டு, அடையாள அட்டை உள்ளிட்ட பல்வேறு சோதனைகளுக்கு பிறகே மாணவர்கள் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர்.

ஃபிட் இண்டியா (5)

ஆசிரியர்களுடன் சைக்கிள் ஓட்டுதல் என்ற கருப்பொருளாக கொண்டு, புதுடெல்லியில் உள்ள மேஜர் தியான்சந்த் தேசிய அரங்கில்

இன்று நடைபெற்ற சைக்கிள் ஓட்டும் நிகழ்ச்சியில் மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா பங்கேற்றார். அப்போது உரையாற்றிய அவர்......

(வாய்ஸ்)

*ஃபிட் இண்டியா வாய்ஸ் (10)*

ஆசிரியர்களே மாணவர்களுக்கு கதாநாயகர்கள் என்றும், ஆசிரியர்கள் தாங்களும் மிதிவண்டிகளை உபயோகித்து, மாணவர்களுக்கும் மிதிவண்டி ஓட்டும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அப்போதுதான் பிரதமர் திரு நரேந்திர மோடியின் உடல் பருமனுக்கு எதிரான போராட்டம் வெற்றி அடையும் என்றும், "பிட் இண்டியா" மற்றும் வளர்ச்சி அடைந்த பாரதம் என்ற தொலைநோக்கு பார்வையை உறுதி செய்யும் என்றும் திரு மாண்டவியா கூறினார். கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்கப்பட்ட இந்த இயக்கம் தற்போது நாட்டின் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் வயது வித்தியாசமின்றி 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களை கொண்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

தேர்தல் சிங்கப்பூர் (10)

சிங்கப்பூர் நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ள அந்நாட்டு பிரதமர் திரு லாரன்ஸ் வோங்-கிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியாவும், சிங்கப்பூரும் வலுவான பன்முகத்தன்மை வாய்ந்த நட்புறவை பேணி வருவதாகவும், இரு நாடுகளும் மேலும் முன்னேற்றம் கானும் வகையில் திரு லாரன்ஸ் வாங்குடன் இணைந்து பணியாற்றுவதை தாம் ஆவலுடன் எதிர் நோக்கி இருப்பதாகவும் பிரதமர் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார். மொத்தம் 97 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட சிங்கப்பூரில், தற்போது ஆட்சியில் உள்ள மக்கள் செயல்பாட்டு கட்சி 87 இடங்களையும், மீதமுள்ள 10 இடங்களை தொழிலாளர் கட்சியும் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

கே□ா இண்டியா (13)

18 வயது உட்பட்டோருக்கான கேலோ இண்டியா இளையோர் விளையாட்டு போட்டிகள் இன்று மாலை தொடங்கி, மே 15 ஆம் தேதி வரை நடைபெற உள்ளன. பீகாரில் பாடலிபுத்ரா விளையாட்டு அரங்கில் தொடங்கியுள்ள இப்போட்டிகளில் 8 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்கின்றனர். மொத்தம் 28 பிரிவுகளில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன. சைக்கிளிங், துப்பாக்கி சுடுதல்,

ஜிம்னாஸ்டிக் ஆகிய விளையாட்டுகள் புதுடெல்லியிலும், மற்ற போட்டிகள் பாட்னா, ராஜ்கீர், கயா, பாகல்பூர் மற்றும் பெகுசாரி ஆகிய இடங்களிலும் நடைபெற உள்ளன. இவ்விளையாட்டு போட்டிகளின் தொடக்க விழாவில் பீகார் மாநில முதலமைச்சர் திரு நிதிஷ்குமார், மத்திய விளையாட்டு துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, இணையமைச்சர் திரு லக்சா கட்சே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முதல் நாளான இன்று வில்வித்தை, கபடி, வாலிபால் ஆகிய போட்டிகள் நடைபெறுகின்றன.

*சிவராஜ்சிங்* (11)

இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலால் உருவாக்கப்பட்ட, மரபணு திருத்தப்பட்ட 2 வகையான அரிசியினை மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் இன்று புதுடெல்லியில் அறிமுகம் செய்தார். உற்பத்தி செலவை குறைத்து, விளைச்சலை அதிகரிக்கும் வகையில் இந்த அரிசி ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், அதிகரித்து வரும் மக்கள் தொகையின் ஊட்டச்சத்து தேவைகளை பூர்த்தி செய்ய நாடு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று கூறினார். இந்த இரண்டு வகை அரிசிகளும் விவசாயிகளுக்கு மட்டும் அல்லாமல், பொதுமக்களுக்கும் பயனளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

மேலும், பிரதமர் திரு நரேந்திர மோடியின் விக்சித் பாரத் திட்டத்தில் இந்த ஆராய்ச்சி ஒரு மைல் கல்லாக இருக்கும் என்றும் திரு சிவராஜ் சிங் கூறினார்.

*காரைக்கால்* (8)

காரைக்கால் மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ கைலாச நாதர், ஸ்ரீ நித்ய கல்யாண பெருமாள் தேவஸ்தானத்திற்கு சொந்தமான ஸ்ரீ காரைக்கால் அம்மையார் ஆலய கும்பாபிஷேகம் இன்று காலை வெகு விமர்சையாக நடைபெற்றது. கடந்த 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடங்கிய திருப்பணிகள் முடிவடைந்து தற்போது கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. விழாவில், சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், அமைச்சர் திரு. பி ஆர் என் திருமுருகன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு நாஜிம், திரு பி ஆர் சிவா, திரு நாகதியாகராஜன் மற்றும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

*அக்னி நட்சத்திரம்* (5)

அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் இன்று தொடங்கி வரும் 28 ஆம் தேதி வரை நீடிக்கும். இந்நாட்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் பொதுமக்கள் பகல் நேரத்தில் வெளியில்

செல்வதை தவிர்ப்பதோடு, தண்ணீர், நீர்மோர், இளநீர், பழங்கள் உள்ளிட்டவற்றை அதிக அளவில் எடுத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர்.

*தன்கர்* (4)

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் இன்று மத்திய பிரதேச மாநிலம் குவாலியருக்கு பயணம் மேற்கொள்கிறார். அங்குள்ள கல்வி நிலையம் ஒன்றில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார். மேலும், குவாலியரில் சில நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்க உள்ளார்.

*விளையாட்டு* (7)

மேட்ரிக் ஓப்பன் மகளிர் டென்னிஸ் சாம்பியன் பட்டத்தை பெலாரசின் சபலென்கா வென்றுள்ளார். இறுதி போட்டியில் அவர் அமெரிக்காவின் கோகோ காஃப்-பை 6-3, 7-6 என்ற நேர் செட்களில் வென்று பட்டத்தை கைப்பற்றினார்.

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் தரம்சாலாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெற உள்ள ஆட்டத்தில், பஞ்சாப் கிங்க், லக்னோ சூப்பர் ஜெயண்ட் அணியை எதிர்கொள்கிறது.